Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

**C.C. No: 212 of 2024**

DATE : 19.05.2026

Depositions of witness for Prosecution

PW: 5

| | | | |
|---|---|---|---|
| Name | புவனேஸ்வரி | Caste | |
| Father/Husband's Name | பதினெட்டாம்படியான் | Calling | சார்பு ஆய்வாளர் |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19 th day of May 2026

1ம் எதிரி இறந்துவிட்டார். 4, 5, 6 எதிரிகள் ஆஜர். 2, 3 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317ன் படி மனு அனுமதிக்கப்பட்டது. 2,4, 5,6ம் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. திலிபன் மற்றும் 3ம் எதிரி தரப்பில் திரு. கார்த்திக்குமார் அவர்கள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u> –**

நான் தற்பொழுது திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் நத்தம்பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது கடந்த 13.12.2012 அன்று காலை 12 மணி அளவில்

நத்தம்பட்டி லட்சுமிபுரத்தைச் சேர்ந்த அய்யனார் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் நி.கு.எண்.157/2012, சட்டப்பிரிவுகள் 379 IPC ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அன்றைய தினமே 14.00 மணிக்கு சாட்சிகள் அய்யனார், வெள்ளைச்சாமி, மாரிமுத்து, கருப்பசாமி மற்றும் ஜெயராம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சுந்தர்ராஜ் மற்றும் ஈஸ்வரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பூவந்தி காவல் நிலையத்தில் இருந்து கடந்த 13.12.2012 அன்று எனக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் பூவந்தி காவல் நிலைய குற்ற எண் 189/2012, பிரிவு 379 இதச என்ற வழக்கில் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்படி எதிரிகள் நத்தம்பட்டி காவல் நிலைய சரகத்தில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டதாக ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததன் அடிப்படையில் மேற்படி குற்ற எண்ணில் தயார் செய்யப்பட்ட அத்தாச்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தின் சான்றிட்ட நகல்களை கைப்பற்றி விசாரணை செய்தேன். **சான்றிட்ட அத்தாட்சிகள் நகல்கள் முறையே அ.சா.ஆ. 6 மற்றும் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. சான்றிட்ட படிவம் 91 முறையே அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ. 9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேற்படி பூவந்தி காவல் நிலைய குற்ற எண்ணில் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் வைக்கப்பட்டிருந்த பிரபு என்ற முத்துப்பாண்டி, பாண்டி, மலைச்சாமி மற்றும் சந்திரன் ஆகியோர்களை மத்திய சிறையில் வைத்து கைதுக்கான காரணம் கூறி சம்பிரதாய கைது செய்தேன். கடந்த 19.12.2012

அன்று மேற்படி எதிரிகளுக்கு PT – Warrant நீதிமன்றத்தில் இருந்து பெறப்பட்டு விசாரணை செய்த பொழுது மேற்படி பூவந்தி காவல் நிலைய குற்ற எண்ணில் குறிப்பிட்டது போலவே என்னுடைய விசாரணையிலும் குறிப்பிட்டதனால் தனியாக ஒப்புதல் வாக்குமூலங்கள் எதுவும் பதிவு செய்யவில்லை. பின்னர் எனக்கு பணி மாறுதல் கிடைத்த காரணத்தினால் வழக்கு கோப்புகளை காவல் நிலையத்தில் ஒப்படைத்து விட்டேன்.

**3ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை –**

காவல் நிலையத்தில் அய்யனார் மட்டும் தான் புகார் கொடுத்தார் என்று சொன்னால் அய்யனார் கொடுத்த புகாரில் காணாமல் போன மற்ற ஆடுகளின் உரிமையாளர்கள் குறித்த விபரங்களையும் சேர்த்து தான் புகார் கொடுத்தார். மேற்படி அய்யனார் கொடுத்த புகார் மனுவில் 3 உரிமையாளர்களும் சேர்ந்து எத்தனை ஆடுகள் வளர்த்து வந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி மூன்று நபர்களும் அவர்கள் வளர்த்து வரும் ஆடுகளை எங்கே பாதுகாப்பாக அனைத்து வைப்பார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அய்யனார் என்பவரின் வீட்டுக்கு அருகில் உள்ள இடத்தில் பொதுவாக அடைத்து வளர்த்து வந்ததாக சொல்லியுள்ளார். சம்பவம் நடைபெற்றதாக சொல்லக்கூடிய தேதியானது 10.12.2012 என்று சொன்னால் புகார் மனுவில் 10.12.2012 அன்று அடைத்து வைக்கப்பட்டிருந்த ஆடுகளை 11.12.2012 அன்று சென்று பார்க்கும் பொழுது காணாமல் போனதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று பார்த்ததாக புகார் மனுவில் குறிப்பிட்ட சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கமாக ஆடுகளை பார்க்க சென்றதாக சொல்லியுள்ளார். என்னுடைய விசாரணையிலும் எத்தனை மணிக்கு சம்பவ இடம் சென்று பார்த்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். புகார் மனுவானது காவல் நிலையத்தில் எப்பொழுது கொடுக்கப்பட்டது என்றால் 13.12.2012 அன்று நண்பகல் 12.00 மணிக்கு

கொடுக்கப்பட்டது. 2 நாட்கள் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டதற்கான காரணங்கள் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆடுகளை அக்கம் பக்கத்தில் தேடி கிடைக்காத காரணத்தினால் புகார் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட அன்றைய தினமே நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதா என்றால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முதல் தகவல் அறிக்கையானது நான் சொல்வது போல பதிவு செய்யப்பட்ட அன்றைய தினம் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படவில்லை என்றும் 20.12.2012 அன்றுதான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட காரணத்தினால் காலதாமதத்திற்கான காரணங்கள் கேட்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்ததில்லை மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு அருகில் குடியிருந்து வருவதாக சொல்லக் கூடிய நபர்களான ஜெயராம், ராஜ்குமார், கருப்பசாமி, பால்கனி, ஆனந்த வள்ளி, சுந்தர்ராஜ், வேல்முருகன் மற்றும் சமுத்திரக்கனி ஆகியோர்களை நான் சாட்சிகளாக இந்த வழக்கில் விசாரணை செய்துள்ளேனா என்றால் விசாரணை செய்துள்ளேன்.

இந்த வழக்கில் புகார்தரார் பொதுவாக ஆடுகளை அடைக்கும் இடத்தில் இரவு நேரங்களில் தங்குவதாக என்னிடம் என்னுடைய விசாரணையில் எதுவும் தெரிவித்தாரா என்றால் ஆடு பாதுகாப்பாக அடைக்கப்படும் இடமும் புகார்தாரருடைய வீடும் அடுத்தடுத்ததாக இருக்கின்ற காரணத்தினால் ஆடு அடைக்கப்படும் இடத்தில் தங்குவதாக என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை. மாரிமுத்து மற்றும் வெள்ளைச்சாமி ஆகியோர்கள் தனியாக ஆடு திருடு போனது சம்பந்தமாக புகார் மனு கொடுக்க வில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு சம்பவத்தில் ஈடுபடுவதற்கு பயன்படுத்தியதாக சொல்லக் கூடிய வாகனத்தை நான் கைப்பற்றினேனா என்றால் ஏற்கனவே

பூவந்தி காவல் நிலைய குற்ற எண்ணில் கைப்பற்றப்பட்டதால் நான் தனியாக கைப்பற்றவில்லை.

பூவந்தி காவல் நிலைய சோதனை சாவடியில் இருந்து கிடைக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் தான் நான் மேற்படி பூவந்தி காவல் நிலையத்திற்கு சென்றேன் என்று சொன்னால் சரிதான். சாட்சி சந்திரமோகன், கிராம நிர்வாக அலுவலர் என்பவரை நான் இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்துள்ளேன் என்றால் விசாரணை செய்துள்ளேன். எந்த தேதியில் நான் மேற்படி சாட்சி சந்திரமோகனை இந்த வழக்கில் விசாரணை செய்தேன் என்றால் 14.12.2012 அன்று விசாரணை செய்தேன். பூவந்தி காவல் நிலையத்திலிருந்து எங்களுக்கு எப்பொழுது தகவல் கிடைக்கப்பெற்றது என்றால் 13.12.2012 அந்த தகவல் கிடைக்கப்பெற்றது. ஆடு திருட்டு சம்பந்தமாக பூவந்தி காவல் நிலையத்திலும் இந்த எதிரிகள் மீது வழக்கு பதியப்பட்டுள்ளது என்று சொன்னால் பதியப்பட்டிருக்கலாம் எனக்கு சரியாக தெரியவில்லை.

சம்பவம் நடைபெற்றதாக சொல்லக்கூடிய நேரத்தில் எதிரிகள் சம்பவ இடத்தில் இல்லை என்றும், பொய்யாக எதிரிகள் மீது இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் சிவகங்கை மாவட்டத்தில் வசித்து வருகிறார்கள் என்றும் மேற்படி காவல் நிலையத்தில் ஒரு பொய்யான புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அதுபோலவே நத்தம்பட்டி காவல் நிலையத்திலும் ஒரு பொய்யான புகார் மனு கொடுக்கப்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பூவந்தி காவல் நிலைய குற்ற எண்ணில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. சாட்சிகளை நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முறையாக விசாரணை செய்திருந்தால் உண்மையான குற்றவாளிகள் யார் என்று தெரிய வந்திருக்கும்

என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்குக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**2, 4, 5, 6 ம் எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை –**

3 வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 2, 4, 5 மற்றும் 6 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

**மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு